**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**M.C. No. 4-2024**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலையன் (PW1) | Date | : 17.03.2025 |
| Father Name | : முத்தையன் | | : |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

எதிர்மனுதாரர் எனது மகன் என்றால் சரிதான். மற்றொரு மகன் செந்தில் குமார். சாட்சி தாமாக முன்வந்து அவர் மனநிலை குன்றியவர் என்று கூறுகிறார். எனக்கு முத்து லெட்சுமி என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான். எனது மகன் அரசு மேல்நிலை பள்ளியில் முதுநிலை ஆசிரியராக பணிபுரிவதற்காக ஆவணத்தையும் அவரது வருமானத்திற்காக ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாசிலாமணி என்பவர் யார் என்றால் எனது மைத்துனர் ஆவார். அவர் எதிர்மனுதாரருக்கு மாமா என்றால் சரிதான். அவர் காரைக்காலில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு தினந்தோறும் மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கமும் புகை பிடிக்கும் பழக்கமும் கிடையாது. எதிர்மனுதாரர் 6 வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை அவரது தாய்மாமாவான மாசிலாமணி என்பவரது வீட்டில் தங்கி படித்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் காரைக்காலில் உள்ள அரசு விடுதியில் தங்கி படித்தார். நான் சொல்வது போல் எதிர்மனுதாரர் விடுதியில் தங்கி படிக்கவில்லை என்றாலும் மாசிலாமணியின் வீட்டில் தங்கி படித்துவந்தார் என்றாலும் அதற்கு காரணம் நான் குடித்துவிட்டு ஊதாரித்தனமாக ஊரை சுற்றி வந்ததுதான் காரணம் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் மறுத்து மறுப்புரையோ அல்லது எனது பிராமண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நன்றாக

படிக்ககூடியவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நன்றாக படித்து அவரது சொந்த முயற்சியில் தான் வேலை வாங்கினார் என்றால் சரிதான். ஆனால், அவருக்கு செலவு செய்து அவர் படிக்க நினைத்த படிப்பை நான் தான் படிக்க வைத்தேன். அவர் படிக்க நினைத்த மருத்துவ படிப்பை என்னால் படிக்க வைக்க இயலவில்லை என்றால் சரிதான். எனது மகள் முத்து லெட்சுமி B.Sc Nursing படித்துள்ளார் என்றால் சரிதான். எனது மகளை எதிர்மனுதாரர்தான் செலவு செய்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு 2020ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது மகளின் திருமணத்திற்கு எதிர்மனுதாரர் தான் ரூ.15,00,000/- செலவு செய்து திருமணத்தை சீறும் சிறப்புமாக நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல. 2016ல் எனது மனைவி தவமணிக்கு காரைக்கால் க்ளுனி மருத்துவமனையில் கர்ப்பபை பிரச்சனை சம்மந்தமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு ரூ.3,00,000/- ஐ எதிர்மனுதாரர் நாகப்பட்டிணம் HDFC வங்கியில் கடன் வாங்கி செலவு செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது சொந்த வீடு கட்டுவதற்காக நாகப்பட்டிணம் அரசாங்க பணியாளர் கூட்டுறவு சிக்கன சங்கத்தில் ரூ. 7 லட்சமும் திட்டச்சேரி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரூ.5 லட்சமும் கடன் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கு 2022ம் ஆண்டு திருமணம் நடந்தது. எதிர்மனுதாரரின் திருமணத்திற்கு பெற்றோர் என்ற முறையில் நானும் எனது மனைவியும் எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை HDFC வங்கியில் ரூ.15 லட்சம் கடன் பெற்று திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எனது மகன் செந்தில்குமாருக்கு மன நோய் சரிசெய்வதற்காக பாண்டிச்சேரி விநாயகா மிஷன் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் காரைக்கால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். அதற்கான செலவை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. எனது மருமகள் பார்கவியிடம் நான் குடிபோதையில் தவறாக நடக்க முயற்சி செய்ததை எதிர்மனுதாரர் தட்டிகேட்டதால் அவரை நான் தாக்கினேன் என்றால் சரியல்ல.

எனது அனுபவத்தில் 4 மா புஞ்சை திடல் உள்ளது. அதில் நான் கடலை பயிர் சாகுபடி செய்து வருகிறேன். நான் 4 மா நிலத்தை பயிர் செய்து வரும் விபரத்தை எனது மனுவிலும் பிராமண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் என்னையும் எனது மனைவியையும் பராமரித்து கொள்ளும் அளவிற்கு எனக்கு வசதி உள்ளது என்றாலும் எங்களை பராமரிப்பதற்கு போதிய வசதி எதிர்மனுதாரருக்கு இருந்த போதிலும் அவருக்கு கடன்கள் அதிகமாக இருப்பதால் எங்களை பராமரிப்பதற்கு அவரால் இயலாது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**